1973 பிப்ரவரி 10]

திரு. கா. வேழவேந்தன்: இந்த அரிசன நல இலாகாவிற்கு மத்திய அரசு பல உதவிகள் செய்கின்றது என்று அமைச்சர் அவர்கள் முன்னுல் பதில் சொல்லும்பொழுது குறிப்பிட்டார்கள். தங்கப் பதக்கம் தருவதற்கு ஆகிற மிகப் பெரிய செலவை மத்திய அரசு ஏற்கிறதா அல்லது மாநில அரசு ஏற்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: என்னிடம் சரியாக இப்பொழுது விவரம் இருக்கவில்லை. ஆனுல், மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 35,000 கடந்த ஆண்டு இதற்கு ஒதுக்கியிருப்பதாக எனக்கு நினைவு.

திரு. எஸ். வடிவேல்: அரிசனரும் மற்ற ஜாதியினரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் பரிசு வழங்கப்படுவதாகச் சொன்னுர்கள். அதேபோன்று செட்டியாரும், முதலியாரும், படையாச்சியும் மற்ற ஜாதியினரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கும் பரிசு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: செட்டியாரும் முதலியாரும் அல்லது மற்ற ஜாதியினர் தீண்டாதவர்கள் அல்ல. ஒருவருக்கொருவர் தீண்டிக் கொள்கின்றவர்கள்தான். ஆனுல், அரிசனங்கள் தீண்டாதவர்களாகக் கருதப்படு கிருர்கள். ஆகவேதான், அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களைக் கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: கலப்புத் திருமணம் செய்துகொண்டால்தான் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும், அதேபோன்று மற்றச் சலுகைகளும் கிடைக்கும் என்றும் கலப்புத் திருமணம் செய்துகொள்வதாகச் சொல்கிருர்கள். வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்ருல் கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பரவலாக இருப்பதால், பலர் கலப்புத் திருமணம் செய்துகொண்டு, பின்னுல் வேலை கிடைக்காமல் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அப்படிப் பலருக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கேள்வியைப் புரிந்து கொள்வதே கஷ்டம். குறிப்பாகச் சுருக்கமாக ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க வேண்டும். ஒரே தொடர்ச்சியாகக் கேள்வி கேட்டால் அதைப் புரிந்துகொண்டு பதில் சொல்வது இயலாது. ஆகவே, தனித்தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வை. பாலசுந்தரம்: வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற காரணத்திற் காகத்தான் கலப்புத் திருமணம் செய்துகொள்கிருர்கள் என்று பேசப்படுகிறது. அந்த அடிப்படையில் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப் பலர் சொல்லிக்கொண்டிருப்பதாகத்தான் சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு அதுபற்றிப் புகார் எதுவும் வரவில்லை. கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குப் பரிசுதான் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்பளிப்பதில் தனிச் சலுகை எதுவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அரிசனங்களுக்கு என்ன சலுகை உண்டோ அது நலத்துறைமூலமாகக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அது அல்லாமல் வேலை வாய்ப்பளிக்கப்படும் என்ற நிலை இல்லை.

Sub-Court for Kuzhithurai

* 109 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal under the consideration of the Government to open a Sub-Court at Kuzhithurai in Kanyakumari district?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இக்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

மாயூரம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளுக்குக் கட்டடங்கள்

* 110. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் முதல் நிலை, இரண்டாம் நிலை மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளுக்காக சொந்தத்தில் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம், மாயூரம் நகரில் முதல்நிலை, இரண்டாம்நிலை மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் கட்டுவதற்காக ரூ. 3.34 லட்சம் செலவுத் தொகைக்கு 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரத்தின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்ற அனுமதி அளித்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வேலை எப்போது முடிவடையும் ? துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவில் நிறைவேற்றப்படும்.